# தெய்வீக பலியில்

தெய்வீக பலியில்.. உறவாடும் தெய்வமே (2)
உன்னோடு பலியாக.. நானும் இணைகின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய்.. காணிக்கை ஏற்றிடுவாய்

தெய்வீக பலியில்.. உறவாடும் தெய்வமே (2)

வானம் காணும் ஒளியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை (2)
மேகம் சிந்தும் துளியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை
இந்த நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உன் மலர் பாதம்

தெய்வீக பலியில்.. உறவாடும் தெய்வமே

வேதம் சொன்ன மொழியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை (2)
பாதம் படைத்த கனியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை
இந்த நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உன் மலர் பாதம்

தெய்வீக பலியில்.. உறவாடும் தெய்வமே (2)
உன்னோடு பலியாக.. நானும் இணைகின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய்.. காணிக்கை ஏற்றிடுவாய்

தெய்வீக பலியில்.. உறவாடும் தெய்வமே